வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ் இடையே

# மெட்ரோ ரயில் வழித்தடத்தில் 3 நாள் ஆய்வு முடிந்தது

## இம்மாத இறுதியில் சேவை தொடங்க திட்டம்

சென்னை, ஜன.22: மெட்ரோ ரயில் முதல் வழித்தட திட்டத்தின் இறுதி கட்டமான டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான வழித்தடத்தில் 3வது நாள் ஆய்வு நேற்று முடிந்தது. பாதுகாப்பு ஆணையரின் ஒப்புதல் கிடைத்தவுடன் இம்மாத இறுதியில் ரயில் சேவையை தொடங்க நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை இடையிலான 10 கி.மீட்டர் சுரங்க வழித்தடத்தில் கடந்த 19ம் தேதி மெட்ரோ ரயில்வே முதன்மை பாதுகாப்பு ஆணையர் மனோகரன் ஆய்வை தொடங்கினார்.

முதல்நாள் ஆய்வில் மெட்ரோ ரயில் கட்டிடத்தின் பாதுகாப்பு அம்சங்கள், பயணிகளின் பாதுகாப்பு, தீ தடுப்பு உபகரணங்கள், தண்டவாளங்கள் உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்தார். மேலும், அன்றைய தினமே வண்ணாரப்பேட்டை முதல் சென்ட்ரல் வரையில் டிராலி மூலம் சுரங்க வழித்தடத்தில் ஆய்வு நடத்தப்பட்டது.

இதை தொடர்ந்து 2வது நாள் ஆய்வு நேற்று முன்தினம் சென்ட்ரலில் இருந்து காலை 8 மணிக்கு தொடங்கியது. சென்ட்ரலில் இருந்து அரசினர் தோட்டம், எல்.ஐ.சி, ஆயிரம் விளக்கு வழியாக டி.எம்.எஸ் வரையில் டிராலி மூலம் பாதுகாப்பு ஆணையர் ஆய்வு செய்தார்.

இதேபோல் இரவு 12 மணி முதல் அதிகாலை 4.30 மணி வரையில் 80 கி.மீட்டர் வேகத்தில் ரயில் இயக்கி பார்க்கப்பட்டது.

நேற்று 3வது நாள் இறுதிகட்ட ஆய்வு காலை 7 மணியளவில் தொடங்கியது. வண்ணாரப்பேட்டை முதல் டி.எம்.எஸ் இடையே முழுமையான ஆய்வு செய்யப்பட்டது. அப்போது, சீரான வேகத்தில் ரயில் இயக்கப்பட்டது.

இந்த ஆய்வு இரவு வரையில் தொடர்ந்தது. நேற்றைய ஆய்வின் போது, மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் மனோகரன், ரயிலின் உட்புற தோற்றம், ரயில் உட்புறத்தில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு அம்சங்கள் குறித்து பார்வையிட்டார்.

பின்னர், வண்ணாரப்பேட்டையில் இருந்து டி.எம்.எஸ் வரை மெட்ரோ ரயிலில் பயணம் செய்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இறுதிகட்ட ஆய்வு நேற்றோடு முடிந்த நிலையில் பாதுகாப்பு ஆணையர் மனோகரன் பெங்களூர் புறப்பட்டு செல்கிறார். பின்னர், அவரது ஒப்புதல் கிடைத்தவுடன் இந்த வழித்தடத்தில் வரும் 28ம் தேதி முதல் 31ம் தேதிக்குள் ஒரு தினத்தில் மெட்ரோ ரயில் சேவையை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.